[2nd February 1966

உல்லாசப் பிரயாணி விடுதி

***58 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடலூர் கடற்கரையருகில் உல்லாசப் பிரயாணி விடுதி ஒன்று கட்டும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) & (இ) கடலூர் கடற்கரை யில் உல்லாச பிரயாணி விடுதி ஒன்று கட்டும் உத்தேசம் அரசாங் கத்தினிடம் தற்சமயம் இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன்: இதுவரையிலும் சாங்க்ஷன் செய்யப்பட்ட டூரிஸ்ட் சென்டர்களிலெல்லாம் எல்லா வேலைகளும் இப்போது இருக்கும் நிலையைக் குறித்து தடை இல்லாமல் நடக்க ஏற்பாடு செய்திருக்கிறார்களா என்று அறியலாமா ?

கனம் திரு. கோ. பூவராகன்: இந்தக் கேள்வி கடலூர் பற்றியது. மற்ற இடங்களிலெல்லாம் தேசிய நெருக்கடியை யொட்டி தள்ளிப்போட்டிருக்கிறார்கள்.

ஊராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்ட தையல் மிஷின்கள்

***59 கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம்:** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தமிழ் நாட்டில் இதுவரை எத்தனை ஊராட்சி மன்றங் களுக்கு தையல் மிஷின் வழங்கப்பட்டுள்ளன ?

(இ) அவை, இதுவரை வாங்கிய நோக்கத்திற்கு பயன் படுத்தப்படவில்லை என்று புகார் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்ததா ?

(உ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) 329 ஊராட்சி மன்றங் களுக்கு தையல் மிஷின்கள் வழங்கப்பட்டுள்ளன.

(இ) இல்லை.

(உ) எழாது.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, மாதர் சங்கங்கள் உள்ள இடங்களிளெல்லாம் தையல் யந்திரங்கள் இருக்கின்றன ஆனால், அவைகள் ஐடிலாக இருக்கின்றன. காரணம், வேண்டிய இன்ஸ்ட்ரக்டர்ஸ் கிடைக்கவில்லை. அமைச்சர் அவர்கள் கேள்விப் படவில்லை என்று சொல்லுவது ஆச்சரியமாக இருக்கிறது. எல்லா இடங்களிலும் டைலரிங் இன்ஸ்ட்ரக்டர்ஸ் போட அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.